Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.15/2024

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : முத்துக்குமரன் | Father/Husband Name | : முத்தையா |
| Calling | : | Age | : |
| Date | : 09.07.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of 07.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**2, 4, 5, 7 எதிரிகள் ஆஜர். 6−ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது மேலவளவு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் சார்பு ஆய்வாளர் முருகேசன் பணி ஓய்வு பெற்று வேறு மாவட்டத்தில் குடியிருப்பதாலும், வழக்கு தரப்பினர்கள் நீதிமன்றத்திற்கு வெளியே பேசி சமாதானம் ஆகிவிட்டதாலும், அதன் அடிப்படையில் அரசு தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டபடியால், நீதியின் நலன் கருதி வழக்கின் விசாரணையை விரைந்து முடிப்பதற்காக வழக்கு கோப்பின் அடிப்படையில் நான் தற்போது கூடுதல் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த 04.04.2011ம் தேதி காலை 10.00 மணிக்கு மேலவளவு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளர் முருகேசன் நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 சரஸ்வதி நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகாரை

பெற்று புகாரின் தன்மைக்கேற்ப மேலவளவு காவல்நிலைய குற்ற எண்.40/11, பிரிவுகள் 147, 148, 452, 294(b), 323, 427, 506(2) இதசன்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். ( **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3) பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

4) பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் வெள்ளையன் மற்றும் செல்லத்துரை ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5) பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சரஸ்வதி, உமா, நெடுஞ்செழியன், செல்வேந்திரன், ராமகிருஷ்ணன், வெள்ளையன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6) பின்னர் கடந்த 04.04.2011–ம் தேதி 16.45 மணிக்கு எதிரி கக்கப்பனை மேலூர் அரசு மருத்துவமனைக்கு முன்னால் வைத்து கைது செய்து 04.04.2011–ம் தேதி 17.15 மணிக்கு நிலையம் கொண்டு வந்து பாரா வசம் ஒப்படைத்துள்ளார்.

7) பின்னர் இவ்வழக்கில் காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த மதுரை, வடமலையான் மருத்துவமனை மருத்துவர் திரு.சிதம்பரம் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(அவர் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இவ்வழக்கின் மற்ற எதிரிகள் முன் ஜாமீன் பெற்றுள்ளதால் கைது செய்யவில்லை.

8) பின்னர் இவ்வழக்கின் புலன்விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 147, 148, 452, 294(b), 323, 427, 506(2) இதசன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2, 4, 5, 7 எதிரிகள் ஆஜர். 6–ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் சொன்னதேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்னவிதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்ட தேதியில் தயார் செய்யப்பட்டவை என்றாலும், அ.சா.1 கொடுத்த பொய் புகாரை பெற்று உங்கள் மேல் அதிகாரி பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், அதற்கு ஆதரவாக நீங்களும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.